பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 22 திங்கட்கிழமை (04-05-1992) UTHAYAN — A Lively National Tamil Dail கதிர் 158

# வடக்கு - கிழக்கிற்கு தனித்தனியான சுயாட்சி சபைகள் நிறுவச் சிபார்சு?

## வாசகர்களுக்கு

பத்திரிகைத் தாள் தட்டுப்பாடு காரணமாக இன்றைய உதயன் இரண்டு தனித் தாள்களில் வெளிவருகிறது. இதனால் ஏற்படும் சிரமங்களைப் பொறுத்துக் கொள்ளுமாறு வாசக அன்பர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

— நிர்வாகத்தினர்

## தெரிவுக் குழுவின் தீர்வு இதுவாம்!

கொழும்பு, மே 4

வடக்கு மாகாணத்துக்கு ஒன்றும், கிழக்கு மாகாணத்துக்கு ஒன்றுமாகத் தனித் தனியான சுயாட்சி சபைகளை (Autonomous Councils) நிறுவ வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்றத் தெரிவுக்குழு இனப் பிரச்சினைக்கான தனது உத்தேச தீர்வுத் திட்டத்தில் சிபார்சு செய்யவுள்ளதாக "சண்டே ரைம்ஸ்" ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

விஷயமறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி அப்பத்திரிகை இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது.

★ வடக்கு மாகாணத்துக்கு தனியான சுயாட்சி சபையையும், கிழக்கிற்குத் தனியான சுயாட்சி சபையையும் நிறுவுதல்—

★ இரண்டு சபைகளின் அலுவல்களையும் ஒருங்கிணைப்பதற்காக மற்றோர் அமைப்பை உருவாக்குதல்—

★ அந்த அமைப்பில் முன் கூறப்பட்ட சுயாட்சி சபைகளின் தலைவர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள் அங்கம் வகிக்க வகை செய்தல்—

ஆகிய அம்சங்கள் தெரிவுக் குழு உத்தேசித்துள்ள தீர்வில் அடங்கியிருப்பதாக விஷய

[2 ஆம் பக்கம் பார்க்க]

## செய்திச் சரம்

### புல்லுமலையில் வெட்டிக்கொலை

யாழ்ப்பாணம், மே 4

மட்டக்களப்பு - புல்லுமலைக் கொலனியை கடந்த வெள்ளிக்கிழமை சுற்றி வளைத்த படையினர் அங்கு ஒரு தமிழரை கண்டதுண்டமாக வெட்டிக்கொலை செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அங்கு பலரை படையினர் சித்திரவதை செய்ததாகவும், 10 பேரை கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[உ-3]

### எழுதுவினைஞர் நேர்முகப்பரீட்சை

யாழ். மாவட்டத்தில் எழுதுவினைஞர் தெரிவுப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இவ்வார இறுதியில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

தகுதியடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 304 பேரில், வெற்றிடங்களைப் பொறுத்து, முன்னணியில் உள்ளவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவிருக்கின்றனர்.

பெரும்பாலும் அடுத்த மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் அவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[உ-3]

### மன்னாரில் தமிழர் கொலை

யாழ்ப்பாணம், மே 4

மன்னாரில் கறுக்காய்குளம் பகுதியை கடந்த வியாழக்கிழமை சுற்றிவளைத்த படையினர் அங்கு கண்மூடித்தனமாக மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு தமிழர் கொல்லப்பட்டனர்.

சிறீதரன் [30 வயது], பழனியாண்டி [70 வயது] ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

அங்கு ஏழு வீடுகளும் படையினரால் எரிக்கப்பட்டன.

### ஊரடங்கு நீக்கம்

மன்னாரில் அமுல் செய்யப்பட்டிருந்த ஊரடங்கு நேற்று நண்பகல் 12 மணி முதல் நீக்கப்பட்டுள்ளதாக கூட்டுப் படை தலைமையகம் அறிவித்துள்ளது. (உ-3)

### பாடசாலைகள் இன்று ஆரம்பம்

கடந்த ஏப்ரல்மாதம் 10 ஆம் திகதி மூடப்பட்ட பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காக இன்று திங்கட்கிழமை மீண்டும் திறக்கப்படுகின்றன.

[ஒ-111]

### தமிழ்ப் பெண்கள் எட்டுப் பேரை காணவில்லை

மட்டக்களப்பு, மே 4

மட்டக்களப்பிலுள்ள மாவடி, வாழைச்சேனை காடுகளில் விறகு சேகரிக்கச் சென்ற எட்டு தமிழ்ப் பெண்களைக் காணவில்லை என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

[உ-த]

### 'லில்லி'யின் சேவை இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், மே 4

யாழ் மாவட்டத்துக்கு அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி வந்த 'லில்லி' கப்பலின் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

தற்சமயம் யாழ். மாவட்டத்தில் போதியளவு அரிசி, மா போன்றபொருள்கள் கையிருப்பில் உள்ளதால், கப்பல் சேவை தற்காலிகமாக நிறுத்தப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

அரிசி, மா ஆகியவற்றுக்குப் பதிலாக கால்நடை உணவு வகைகள், உரவகைகளை ஏனைய கப்பல்களில் கூடுதலாக எடுத்துவர நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்.

[உ-3]

### 100 பக்கெட் சிமெந்து தருவிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 4

பருத்தித்துறை இறங்கு துறையை விஸ்தரிக்கும் வேலைகளை மேற்கொள்ள 100 பக்கெட் சிமெந்து எடுத்து வரப்படவுள்ளன.

குமாரி கப்பலில் எதிர்வரும் 8 ஆம் திகதி இவை பருத்தித் துறைக்கு எடுத்து வரப்படும்.

[உ-3]

### லொஸ் ஏஞ்சல்ஸ் அழிவுப்பிரதேசம்

வாஷிங்டன், மே 4

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரை அழிவுப் பிரதேசமாக ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நேற்று பிரகடனஞ் செய்தார்.

இதன் மூலம் இன வன்செயல்களால் அங்கு பாதிக்கப்பட்ட உள்ளூர் ஸ்தாபனங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள் மற்றும் பொதுமக்கள் சமஷ்டி அரசின் உதவியைப் பெற்று புனர் நிர்மாண வேலைகளை மேற்கொள்ள வழி செய்யப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை ஆரம்பமான வன்செயல்களில் லொஸ் ஏஞ்சல்ஸில் மட்டும் குறைந்தது 40 பேர் உயிரிழந்தனர். 200 பேர் வரையில் படுகாயமடைந்தனர். உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதம் 50 கோடி டொலர்களுக்கு மேல் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

### முச்சந்தி முரளி



காலம் பிந்தின ஞானம் கண்டியளோ......!

## அரசியல் தீர்வு கிட்டும் சாத்தியம்; யாழ். வந்த பிக்குகள் நம்பிக்கை

கொழும்பு, மே 4

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணக் கூடிய சாத்தியம் இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டுக் கொழும்பு திரும்பிய பௌத்த குருமார் தூதுக்குழுவினர் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள்.

இதேவேளை—

உண்மையான தீர்வு ஒன்றைக்காணத் தாம் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூறியதாகத் தூதுக் குழுவின் தலைவர் வண. பலப்பிட்டிய ஸ்ரீ சித்தார்த்த மகாநாயக்க தேரர் "சண்டே ரைம்ஸ்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

பேச்சுவார்த்தைகள் இடம் பெறமுடியும் என்றும்—

சமாதானத்திற்காக தமது கதவுகள் திறந்துள்ளன என்றும்— உண்மையான யுத்த நிறுத்தம் ஒன்றுக்கும் தாம் தயார் என்றும் கலாநிதி பாலசிங்கம் கூறியிருக்கின்றார்—

"விடுதலைப் புலிகள் பலவீனம் அடையவில்லை. அரசியல் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு யுத்த நிறுத்தம் ஒன்று அத்தியாவசியம் என்றபடியால்தான், யுத்த நிறுத்தம் ஒன்றை நாம் கோருகின்றோம்" என்று கலாநிதி பாலசிங்கம் தெரிவித்தார் — என்றும் ஸ்ரீ சித்தார்த்த மகாநாயக்க தேரர் தமது பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

## ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை

கொழும்பு, மே 4

கூட்டுப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்பட்ட வரதன் என்பவர் பற்றிய தகவலை வெளியிடத் தவறிய சங்கரப்பிள்ளை பாலச்சந்திரன் என்பவருக்கு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி எப். டி. என். ஜெயசூரியா பத்து ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து இத் தண்டனை விதிக்கப்பட்டது.

## கடத்தப்பட்ட 12 தமிழரை மீட்க பேச்சு நடக்கிறதாம்

கொழும்பு, மே 4

பொலன்னறுவ மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற வன் செயல்களைத் தொடர்ந்து கடத்திச் செல்லப்பட்ட பன்னிரண்டு தமிழ்ப் பொது மக்களையும் விடுவிப்பது குறித்து பேச்சுகள் நடைபெற்று வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தியன் வட்டவானில் உள்ள மியன்கரச்சி கிராமத்தில் இருக்கும் காட்டில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட இவர்களில் 8 பேர் ஆண்கள் என்றும் நான்கு பேர் பெண்கள் என்றும் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'சண்டே ரைம்ஸ்' செய்தி வெளியிட்டிருக்கிறது.

"தமிழர்களை விடுவிக்க முஸ்லிம் பிரதிநிதிகளுடன் நாம் பேசினோம். ஆனால் அம்முஸ்லிம் பிரதிநிதிகளினால் கடத்தப்பட்டவர்களுடன் தொடர்புகொள்ள முடியாதிருந்தது. தமிழரைக் கடத்தியவர்கள் ஐந்து முஸ்லிம் இளைஞர்கள் என்று நம்பப்படுகின்றது" — இப்படி பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறினார்.

[ஒ-எ]

## 1983 ஜூலை வன்செயல்கள் குறித்து பிக்குமார் வருத்தம்

கொழும்பு, மே. 4

யாழ்ப்பாணம் சென்றிருந்த பௌத்த குருமார் தூதுக் குழுவினர் 1983 ஜூலை வன்செயல்கள் குறித்து விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களிடம் வருத்தம் தெரிவித்தனர்.

இத்தகவலை தூதுக்குழுவினர் தெரிவித்ததாக கொழும்பு வாரப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பின்வரும் கோரிக்கைகளை தூதுக்குழுவினர் புலிகளிடம் தெரிவித்திருந்தனர் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

அநுராதபுரம் ஸ்ரீ மகா போதி விகாரைக் கொலைகள், அரந்தலாவையில் பௌத்த பிக்குகள் கொல்லப்பட்ட சம்பவம் ஆகியவற்றுக்கு தமிழர் அமைப்புக்களும் வருத்தம் தெரிவிக்க வேண்டும்.

எல்லா பணயக் கைதிகளும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். (அ-எ)

## தமிழீழ மீட்பு நிதி 536 பேருக்கு மீளளிப்பு

தமிழீழ மீட்பு நிதிக்கு கடனளித்தோரில் மற்றும் ஒரு தொகுதியினருக்கு கடன் மீளளிப்பு செய்யப்படவிருக்கிறது. 536 பேருக்கு எதிர்வரும் 16, 17 ஆம் திகதிகளில் கடன் மீளளிப்புச் செய்யப்படும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் திரு. சு. தமிழேந்தி தெரிவித்தார்.

தமிழீழ மீட்பு நிதி செலுத்தியோரில் மாதாந்தம் அதிஷ்ட குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் நூறு பேருக்கு கடன் மீளளிப்புச் செய்யும் திட்டத்தின் கீழ் 536 பேர் இம்முறை கடன் மீளளிப்பைப் பெறவிருக்கின்றனர்.

[உ]

## பிரதமரின் அறிக்கைக்கு உடுகம்பொல பதில்

கொழும்பு, மே 4

பிரதமர் டி. பி. விஜேதுங்கா தம்மீது சுமத்திய குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்து முன்னாள் பிரதி பொலீஸ் மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பொல அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றார்.

பிரதமர் கடந்த மாதம் 8 ஆம் திகதி வெளியிட்ட அறிக்கை ஒன்றில், உடுகம்பொலவின் குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்று கூறி இருந்தார்.

பிரதமரின் குற்றச்சாட்டுகளுக்கு விவரமாக பதிலளித்த உடுகம்பொல, "கறுப்புப் பூனைகளின் நடவடிக்கைகளுடன் ஒத்துப்போக மறுத்த பல இராணுவ அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் திருமலையில் நிலக்கண்ணித் தாக்குதலில் கொல்லப்பட்ட பிரிகேடியர் லக்கி விஜேரத்னாவும்" என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

உடுகம்பொல தனது பதில் அறிக்கையை "சண்டே டைம்ஸ்" பத்திரிகைக்கு அனுப்பி வைத்திருந்தார். அது நேற்றைய "சண்டே டைம்ஸ்" பத்திரிகையில் வெளியாகி இருந்தது.

[உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8 நோயாளர் வந்து சேர்ந்தனர்

யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவதற்காக கர்ப்பிணிகள் உட்பட எட்டுப் பேர் நேற்று 'குமண' கப்பல் மூலம் திவகத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். அவர்களுக்கு உதவியாக அவர்களுடன் கூட நான்கு பேரும் வந்தனர். [உ-165]

## சிப்பாய் தற்கொலை

வவுனியா, மாமடுவ இராணுவ முகாமைச் சேர்ந்த டி. எம். பியசேன [வயது 19] என்ற இராணுவச் சிப்பாய் கடந்த ஞாயிறன்று தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன. [உ-த]

## தமிழக அரசுடன் இழுபறி:

# 'ஓம்புட்ஸ்மன் குழு அமைக்க பத்திரிகையாளர்கள் முடிவு

சென்னை, மே 4

தமிழக சட்டசபைக்கும் பத்திரிகையாளர்களுக்கும் இடையே எழுந்துள்ள கசப்பான நிலையை ஆராய ஆலாட்சி அதிகாரிகள் ''ஓம்புட்ஸ்மன்'' குழு ஒன்றை நியமிக்க நான்கு பத்திரிகையாளர் அமைப்புகள் முடிவு செய்துள்ளன.

சென்னை பத்திரிகையாளர் சங்கம், தென்னிந்திய பத்திரிகையாளர் சம்மேளனம், சென்னை செய்தியாளர் சங்கம், சென்னை பிரஸ்கிளப் ஆகியவற்றின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் கூடி இம்முடிவை எடுத்தனர்

உத்தேச ஓம்புட்ஸ்மன் குழுவில், மூத்த பத்திரிகையாளர்களும், நீதிபதிகளும் இடம் பெறுவர் என்று பத்திரிகையாளர் அமைப்புக்கள் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

சில பத்திரிகைகள் தரக்குறைவாக எழுதுவது உட்பட அரசுக்கும் பத்திரிகைகளுக்கும் இடையே சமீபத்தில் தோன்றியுள்ள இழுபறி சம்பந்தமான எல்லா விவரங்களையும் இந்தக் குழு ஆராய்ந்து அதன் முடிவை அறிவிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது. (உ-த)

## குமண புறப்பட்டது

வடமராட்சி, மே. 4

பருத்தித்துறையில் தரித்து நின்ற 'குமண' கப்பல் நேற்று மாலை திருகோணமலைக்குப் புறப்பட்டது. இக்கப்பல் நோயாளிகளை ஏற்றிக் கொண்டு செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை துறைமுகத்துக்கு திரும்பி வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. [உ-3-165]

## கடல் விளையாட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 4

கடற்புலிகளின் விளையாட்டுப்பிரிவு நடத்தும் கடல் விளையாட்டுப் போட்டி இன்றும் நாளையும் வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரையில் நடைபெறும்

நீச்சல், அஞ்சல் நீச்சல், கட்டுமரம் வலித்தல், சுழி ஓட்டம், பந்து கடத்தும் போட்டி ஆகியவையும் ஐந்து மைல், ஒரு மைல் நீச்சல் போட்டிகளும் நடைபெறவிருக்கின்றன.

கடற் கரும்புலிகளான கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் ஆகியோர் நினைவாக நடைபெறும் இவ்விளையாட்டுப் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக தமிழீழ கடற்படைத் தளபதி திரு. கங்கை அமரன் பங்கு பற்றுவார்.

வன்னிப் பிராந்திய கடற்படைத் தளபதி திரு. தேவன் கொடி ஏற்றிவைப்பார்.

தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி திரு. சூசை பரிசில் வழங்குவார். [உ-165]

## உற்சவம்

மல்லாகம் அருள்மிகு காளிகாதேவி ஆலய வருடாந்த சங்காபிஷேகத் திருவிழாவும் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவும் இன்று திங்கட்கிழமை சிறப்புற நடைபெறவுள்ளன [ஒ]

## வடக்கு-கிழக்கிற்கு...

[1 ஆம் பக்கம் தொடர்ச்சி]

மறிந்த வட்டாரங்கள் தகவல் தெரிவித்ததாக ''சண்டே ரைம்ஸ்'' தனது செய்தியில் கூறியுள்ளது.

பிரதான தமிழ் அரசியல் கட்சிகள் சமர்ப்பித்த யோசனைகளின் பிரகாரமே தெரிவுக் குழு இந்தத் தீர்மானத்துக்கு வரவிருப்பதாகவும் அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

பூரண பிராந்திய சுயாட்சி கோரிவரும் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத ஒரு தீர்வாகவே இது இருக்கும் என்று அரசியல் பகுப்பாய்வாளர்கள் கருத்துத் தெரிவித்ததாகவும் அதே செய்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ-எ)

# யாழ்-சுவீடிஷ் பல்கலைக்கழக இணைப்பு விஸ்தரிக்கப்படும்

யாழ்ப்பாணம், மே 4

யாழ். பல்கலைக்கழகத்துடன் சுவீடன் உப்சால் பல்கலைக்கழகம் ஏற்படுத்தியுள்ள இணைப்பு மேலும் விஸ்தரிக்கப்படவிருக்கிறது

இந்து நாகரிகம், தமிழ்த் துறைகளுடன் இரு பல்கலைக்கழகங்களுக்கும் இடையில் இணைப்புச் சேவை நடைபெற்று வருகிறது.

இந்த இணைப்பை கல்வித் துறைக்கும் விஸ்தரிக்க இணக்கம் ஏற்பட்டுள்ளதாக பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தெரிவித்தார்.

உப்சால் பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பீற்றர் ஷோக் ஜூலை மாதம் இங்கு விஜயம் செய்யவிருக்கிறார். [த-3]

## பிரதம நீதியரசர் சுட்டுக்கொலை

காபூல்,, மே. 4

ஆப்கானிஸ்தானில் முன்னாள் பிரதம நீதியரசர் கரீம் சர்தால் இனந்தெரியாத மூவரைக் கொண்ட குழு ஒன்றினால் கடத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் கடத்திச் செல்லப்பட்ட முன்னாள் சிவில் போக்குவரத்து அமைச்சர் பதீர் சுகி என்ன ஆனார் என்று தெரியவரவில்லை. [உ-10]

## தமிழக சட்டசபை அவசரக் கூட்டம்

சென்னை, மே 4

தமிழக சட்டசபையின் அவசரக் கூட்டம் ஒன்றை சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா இன்று திங்கள் காலை 10 மணிக்கு கூட்டியிருக்கின்றார்.

சட்டசபையின் கூட்டத் தொடர் சென்ற மாதம் 28 ஆம் திகதி காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது தெரிந்ததே.

கோவை மாலைமுரசு ஆசிரியர் தாக்கல் செய்த மனு தொடர்பாக தமிழக சட்டசபை செயலாளர் ஜானகிராமனை இம்மாதம் 5 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்று புதுடில்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்தப் பின்னணியில் சட்டசபை அவசரமாகக் கூட்டப்படுவது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று என அறிவிக்கப்படுகின்றது.

## யாருடையவை?

யாழ்ப்பாணம், மே 3

சுன்னாகம் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட பணப்பை ஒன்று, சுன்னாகத்தில் உள்ள உதயன் சேவை நிலையத்தில் திரு. எஸ். கே. பேரின்பநாயகம் என்பவரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் உரிமையாளர் தகுந்த அத்தாட்சிகளைச் சமர்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

★ ★ ★

நல்லூர்ப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட காசோலை ஒன்று உதயன் தலைமைப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சங்கானையைச் சேர்ந்த சின்னத்துரை ஞானகரன் என்பவர் இந்தக் காசோலையை ஒப்படைத்தார். அதன் உரிமையாளர் தகுந்த அத்தாட்சிகளைச் சமர்ப்பித்து அலுவலக நேரத்தில் அதனைப் பெற்றுக்கொள்ளலாம். [அ]

## ஹெரோயின் விழுங்கிய தம்பதியர் கைது

வயிற்றினுள் 5 லட்சரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளை மறைத்துக்கொண்டு சென்னையிலிருந்து விமானம் மூலம் கொழும்பு வந்து சேர்ந்த இளம் தம்பதியினர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பொலீஸாரிடம் சிக்கினர்.

சுங்கப் பரிசோதனை முடிந்து வெளியே வரும் போது பொலீஸார் இவர்களைத் தடுத்து நிறுத்தி சோதனையிட்டபோது 384 கிராம் ஹெரோயின் பிடிபட்டது இதன் பெறுமதி 5 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவாகும்.

பெண்ணின் வயிற்றில் 120 கிராமும் அவரது கணவரிடம் 264 கிராமும் ஹெரோயின் பக்கெட் செய்யப்பட்ட நிலையில் இருந்ததாம்.

இவர்கள் கொழும்பு ஹல்ஸ்டோர்ப்பைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-த]

## எதிரணியின் பேரணியில் 'கறுப்பு பூனைகள்'!

கொழும்பில் எதிர்க்கட்சிகள் கூட்டாக நடத்திய மேதினப் பேரணியில் ''கறுப்புப் பூனை''களும் ஆங்காங்கே பவனி வந்தன.

''கறுப்புப் பூனை''களின் பயங்கரவாதத்தைச் சித்திரிக்கும் வகையில் கறுப்புப்பூனைகள் போல் வேடமணிந்த பலரும் பேரணியில் சென்றதைக் காணக்கூடியதாகவிருந்தது.

கொழும்பு இருளப்பனையில் ஆரம்பமான எதிரணியினரின் பேரணி ஒரு குறிப்பிட்ட நிலையைக் கடந்து செல்ல ஏழு மணித்தியாலங்கள் எடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஓ-10]

## பஸ் கட்டணம் குறைப்பு

வடமராட்சி தனியார் பேருந்து சங்கம் பருத்தித்துறை — யாழ்ப்பாணம் பஸ் கட்டணத்தை இருபது ரூபாவாகக் குறைத்துள்ளது.


"ஷிப்றா" கிண்ணத்துக்காக
யாழ். ஜொலி ஸ்ரார்ஸ் வி. க. நடத்தும்
7ஆவது வருடாந்த
மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்
கிரிக்கெட் போட்டி

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கிரிக்கெட் கழகங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விண்ணப்ப முடிவு : 10 - 05 - 92 மாலை 6 மணி
போட்டி ஒழுங்குத் தெரிவு: 12 - 05 - 92 மாலை 5 மணி
அனுமதிக் கட்டணம் : ரூபா 400/-

விண்ணப்பப் பத்திரங்களையும் போட்டி விதிமுறைகளையும் பெற்றுக்கொள்ள

பொ. பாலகிருஷ்ணன்
100, [illegible]ாசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

சண். தயாளன்
யாழ். இந்துக் கல்லூரி.
யாழ்ப்பாணம்

[சி/1980]



நிரு ரியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

A/L 92 வினா - விடை
வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
பொருளியல் - உதயன்
பகுதி I- 80ஆம் ஆண்டு முதல் 91 வரை
பகுதி II- 86 ஆம் ஆண்டு முதல் 91 வரை
ஆரம்பம்: 07 — 05 — 1992 (வியாழன்)
மாலை 3-00 மணி.
— நிர்வாகி.

[சி-2254]



விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L DAY CLASSES
(காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை)
பிரிவு — 5
ஆரம்பம்: 07 - 05 - 1992

★ எமது தனித்துவம் வாய்ந்த வழமையான ஆசிரியர் குழு.
★ கணித, விஞ்ஞான பாடங்கள் நாள் ஒன்றிற்கு இரண்டு மணி நேரம் நடைபெறும்.
★ விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

[சி-1969]



கலை வர்த்தக கல்லூரி
C.C.A
A/L 92
DAY CLASS

| | |
|---|---|
| வர்த்தகம் | 8 – 9 |
| பொருளியல் | 9 – 10 |
| கணக்கியல் | 10 — 12 |
| இந்துநாகரிகம் | 4 — 5 |
| அளவையியல் | 5 - 6 |

ஆரம்பம்; 5-5-92
செவ்வாய் காலை 8-00

[சி/2258]



ECALOM
மனோகராச் சந்தி,
யாழ்ப்பாணம்.

A/L 94
புதிய பிரிவு
ECO. — உதயன்
ACC. — சௌந்தி
COM. — பசில்
LOG. — பிரபாகரன்
ஆரம்பம்:
05—05—1992
செவ்வாய் — [5 மணி]
★ பொருளியல் - செவ். 5 மணி
வகுப்புக்கு சமுகம் தரவும்.

A/L 92
பொருளியல்
வினா - விடை
திரு — உதயன்
பகுதி I
1980 — 1991 வரை.
பகுதி II
1986 — 1991 வரை.
ஆரம்பம்:
05—05—1992
செவ். - 5 மணி.
[சி-2251]



O/L 92
துரித மீட்டல் வகுப்பு

THE EXPRESS INSTITUTE
KOPAY
A BOON TO STUDENTS

பகல் முழுநேரம்
காலை 8— பி.ப 1.00
ஆரம்பமாகி நடைபெறுகிறது.
★ கடந்த காலங்களில் O/L பரீட்சையில் அதிக நூற்றுவீத மாணவர்கள் சித்தியெய்திய புகழ் பெற்ற நிறுவனம்.

மே 10ஆம் திகதிக்கு பின்னர் அனுமதிகள் வழங்கப்படமாட்டா.
[4823]


## மரண அறிவித்தல்

### வயிரமுத்து வள்ளியம்மை
( ஆச்சிப்பிள்ளை )

நயினாதீவு, வயிரமுத்து வள்ளியம்மை [ஆச்சிப்பிள்ளை] நயினாதீவில் 29-4-92 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற வயிரமுத்துவின் அன்பு மனைவியும், குழந்தைவேலு, அன்னலெட்சுமி, இரத்தினசபாபதி, அன்னபூரணம், சபாரெத்தினம் [அதிபர், நயினை நாகபூசனி வித்தியாலயம்], சிவபாக்கியம் ஆகியோரின் அன்புத் தாயாரும், பவானி அம்மா, காலஞ்சென்ற கோபாலபிள்ளை, ஞானப்பூங்கோதை, தங்கராசா, காலஞ்சென்ற நடராசா, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை நயினாதீவில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

15/2, மாரி அம்மன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
K. K. நாதன் [பேரன்]
யாழ். பிரதம தபாலகம்
(20841)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 04 - 5 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அரியணை ஏற்ற தயார் செய்வோம்

ஈழத்தின் அரச பீடமாக விளங்கிய நல்லையம்பதியிலே ஒருவார கால தமிழிசை விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்று மூன்றாவது நாள்.

இசையால் மயங்காத மானிடர்கள் மிகக் குறைவு. மனிதனுக்கு உள, உடல் பூரிப்பை வழங்க வல்லது இசை. இசையின் உணர்வு நாடி நரம்புகளில் தென்பை ஊட்டுகின்றது. புத்துணர்வைத் தருகின்றன. இசையில் ஒன்றிவிட்டால் மனக்கவலைகள் மறந்து போகும்.

இசையால் மனிதர்களை மட்டுமென்ன, இறைவனையே இசைய வைத்துவிடலாமே! தமிழோடு இணைந்தது இசை. தமிழோடு இசை பாடி இறைவனைத் தம் வசமாக்கியவர்கள் எங்கள் முன்னோர்கள். சித்தமும், சிவனுமாய் இறைவனை இசை வடிவமாய்க் கண்டவர்கள் அவர்கள்.

அந்த இசையையும், தமிழர் பண்பாடுகளையும், வாழ்வியல் சிறப்புகளையும் பாரம்பரிய கலைகளையும் பேணி வளர்க்க ஒண்ணாது தடுத்து மழுங்கடிக்கச் சிங்கள அரசாங்கங்கள் தங்கள் சக்திக்கு உட்பட்ட சகல சூழ்ச்சிகளையும் செய்து வருகின்றன.

ஆண்டாண்டு காலமாக அவை கலாசார பண்பாட்டுக் கொலைகளில் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் ஈடுபட்டு வருகின்றன. எனினும் தமிழிசையும் ஏனைய கலைகளும் அழிந்துவிடவில்லை. ஆனால் கலைஞர்களுக்கு ஊக்கமளித்து, உற்சாகம் ஊட்டி கலைகளை வளர்க்க முடியாத ஒரு தேக்க நிலை உண்டாகியிருப்பது உண்மை.

அத்தகைய ஒரு தேக்க நிலை நீக்கப்பட்டு, இசை உட்பட தமிழர்களின் கலைகள், பண்பாடுகள், பாரம்பரியங்கள் புத்தெழுச்சியுடன் வளரப்போகின்றன என்ற மகிழ்வுறு எதிர் காலத்துக்குக் கட்டியம் கூறுவது போல இந்தத் தமிழிசை விழா அமைந்துள்ளது எனலாம்.

தமிழர்களைத் தொடர்ந்து அடக்க ஆள முடியும் என்று கனவு கண்டுகொண்டிருக்கும் சிங்கள அரசு, அவர்கள் மீது குண்டுகளைப் பொழிந்து தள்ளினாலும், அவர்கள் தமது கல்வியையும், கலாசாரத்தையும், கலைகளையும் அழியவிடப் போவதில்லை என்பதை எடுத்துச் சொல்லும் பெருவிழாவாகவும் இது அமைகிறது.

இற்றைக்கு மூன்று நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் தமிழ்ப் பகுதிகளில் ஊர் தோறும் இசை விழாக்கள், தமிழ் விழாக்கள் நடைபெற்றன. மாதந்தோறும் கலை நிகழ்ச்சிகளும், பண்பாட்டு நிகழ்வுகளும் நடந்தன.

அரசியல் இருளடைந்து, உரிமைப் போரில் கவனம் செலுத்த வேண்டிய தேவை உருவானதாலும், ஆதரவளிப்பார் இல்லாத நிலையாலும் அந்தச் செழிப்பான, பொழிப்பான காலம் இப்போது கதையாகச் சொல்ல வேண்டிய ஒன்றாகிவிட்டது!

அந்தக் காலம் மீண்டும் பிறக்க வேண்டும். தமிழர் கலைகள் எழுச்சியும், மகிமையும் பெற வேண்டும். தமிழர்களுக்கெனத் தனி அரசு உருவாகும் போது, தமிழோடு சேர்ந்து தமிழர் கலைகளும் அரியணை ஏறும் தகைமை பெற வேண்டும். அதற்கான தயார் நிலைக்கு தமிழ்க்கலைகளை மேலெடுத்துச் செல்வோமாக!

## தமிழிசை விழாவில் இன்று

யாழ்ப்பாணம், மே. 4

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம், நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் அமைந்துள்ள அரங்கில் நடக்கும் தமிழிசை விழா 3ஆம் நாள் [இன்று திங்கள்] நிகழ்ச்சி விவரம் வருமாறு:

**மங்கள இசை**

[மாலை 5-00 மணி தொடக்கம் 6-00 மணி வரை]

நாதஸ்வரம்: திருவாளர்கள் என். ஆர். சந்தானகிருஷ்ணன், வி. சுப்பிரமணியம், கே. கிருஷ்ணதாசன், எஸ். தேவதாசன். தவில்: திருவாளர்கள் எஸ். ஜெயராமன், ஜி. சின்னநாதன், ஆர். ஜீவா, என். வரதன்.

**பாட்டு**

[6-00 மணி தொடக்கம் 6-45 வரை]

செல்வி மேகலா கனகசபை — பாட்டு, செல்வி பாக்கியலட்சுமி நடராஜா — வயலின், திரு. கே. துரைராசா — மிருதங்கம்.

**பாட்டு**

[6-45 தொடக்கம் 7-45 வரை]

செல்வி கனகாம்பரி பத்மநாதன் — பாட்டு, திரு. எஸ். கோபிதாஸ் — வயலின், திரு. கே. கண்ணதாசன் — மிருதங்கம்.

**பாட்டு**

[7 45 தொடக்கம் 8-45 வரை]

திருவாளர்கள் எஸ். குமாரசாமி — பாட்டு, எஸ் வெங்கடேஸ்வரசர்மா — வயலின், எஸ் பாலசந்திரசர்மா — மிருதங்கம்

**சிறப்பு விருந்தினர் உரை**

[8-45 தொடக்கம் 9-15 வரை]

திரு. இளம்பரிதி [யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்], வண. பிதா - பிரான்சிஸ் யோசேப் அடிகளார், திரு. ரவி [திருமலைத் தொடர்பகம்].

**பாட்டு**

[9-15 தொடக்கம் 10-15 மணி வரை]

திருவாளர்கள் எஸ் திலகநாயகம் போல் — பாட்டு, ஆர். ராதாகிருஷ்ணன் — வயலின், எஸ். மகேந்திரன் — மிருதங்கம், கே. துரைராசா — கெஞ்சிரா.

**நாதஸ்வரம்**

[10-15 மணி தொடக்கம் 11-30 மணி வரை]

நாதஸ்வரம்: திருவாளர்கள் கே. ஆர். சுந்தரமூர்த்தி, வி. கே. கானமூர்த்தி, வி கே பஞ்சமூர்த்தி, கே. செல்வரட்ணம். தவில்: திருவாளர்கள் கே. நித்தியானந்தம், பி. கணேஷ், ஆர். பாஸ்கரன், என். கணேசன்.

## பொருளாதார புள்ளி விவரம்

யாழ்ப்பாணம், மே 2

யாழ். மாவட்ட பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பான புள்ளி விவர மதிப்பீடு செய்யப்படவிருக்கிறது.

இது சம்பந்தமான சரியான விவரங்கள் செயலகத்தில் இல்லாததால், அவை பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, மீனவர்கள், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் பற்றிய கணக்கெடுப்பும், தொழிற்சாலைகளின் விவரங்களும் பெறப்படவுள்ளன. [ஒ-3]


# பதவி வெற்றிடங்கள்

1. **உணவுச்சாலை முகாமையாளர்கள்**

எமது சங்கம் நடத்தும் யாழ் பல்கலைக்கழக ஆண், பெண் விடுதி உணவுச்சாலைகளில் கடமைபுரிவதற்கு இருபாலாரிடமும் விண்ணப்பம் கோரப்படுகிறது

2. **விற்பனவு நிலைய முகாமையாளர்**

சங்கத்தின் கற்பகத்தரு உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் கொள்வனவு விற்பனவு நிலையத்துக்கு பெண்பாலாரிடம் விண்ணப்பம் எதிர்பார்க்கப்படுகிறது.

**தகைமை:**

க. பொ. த (சா. த.) 2 அமர்வுகளுக்கு மேற்படாமல் வர்த்தக எண்கணிதம் / தூய கணிதம், தமிழ் பாஷை என்பனவற்றில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி.

சம்பந்தப்பட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக ஸ்தாபனத்தில் மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஒரு வருடத்துக்கு குறையாத அனுபவம்.

வயது: **25 — 40** வரை

3. **சமையல்காரர்**

4. **உதவியாளர்**

சம்பந்தப்பட்ட துறையில் சிறந்த அனுபவம், அறிவு உடையவர்கள் திறமைக்கேற்ப வயது எல்லையில் சலுகை அளிக்கப்படும். 6 ஆம் வகுப்பு சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சை 08 - 05 - 1992 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு. ப. 10-30 மணிக்கு சங்க காரியாலயத்தில் நடைபெறும். விண்ணப்பதாரிகள் சான்றிதழ்களின் மூலப் பிரதியுடன் நேரில் சமூகமளிக்கவும். ஏற்கனவே இப்பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்களும் சமூகமளிக்கவும். கடிதம் தனித்தனி அனுப்பப்படமாட்டாது.

பொது முகாமையாளர்,
கோண். / இணு தெ. ப. பொ. கூ. சங்கம்,
கற்பகதரு தாவடிச்சந்தி,
கோண்டாவில்.
(சி-1876)



NEW SCIENCE ACADEMY
JAFFNA.

92 A/L
DAY CLASS
ஆரம்பம்: 05 — 05 — 1992
செவ். காலை 8-00 மணி
[சி-1978]



யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
## பழைய மாணவர் சங்கம்

★ இது நாள் வரை மேற்படி சங்கத்தில் உறுப்பினராகாத இப் பாடசாலையின் பழைய மாணவர்கள் உரிய விண்ணப்பம் மூலம் உறுப்புரிமை கோருமாறும்; -

★ ஏற்கனவே உறுப்பினராக இருப்போர் உரிய சந்தாவைச் செலுத்தி உறுப்புரிமையைப் புதுப்பித்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

நன்றி.

அனு. வை. நாகராஜன், தலைவர்.
க. தேவராஜா, செயலாளர்.
02-05 1992
(சி-2257)



## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

A/L கலை, வர்த்தகம்
94 பிரிவு - 2
ஆரம்பம்: 09 - 05 - 1992
காலை 8 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| கணக்கியல் | — | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | — | திரு சுப்பிரமணியம் |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| இந்து நாகரிகம் / இந்து சமயம் | — | திரு. கரைசுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — | திரு. குணராசா |
| அரசியல் | — | திரு ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. சிறீதரன் |

[சி-2259]



## பாரதிதாசன்
★ கல்வி நிறுவனம் ★
(BECON)

A/L 92 DAY CLASSES

**பொருளியல்: வரததராஜன்**

| | |
|---|---|
| 12 — 1 | இலங்கைப் பொருளாதாரம் |
| 1 — 2 | வினா - விடை பிரிவு I |
| 2 — 3 | வினா - விடை பிரிவு II |

**கணக்கியல்: சௌந்தி**

| | |
|---|---|
| 8 — 9 | கம்பனி |
| 9 — 10 | நிலையான சொத்து விற்பனை |
| 2 — 3 | பங்குடமை |

**வர்த்தகம்: பசில்**

| | |
|---|---|
| 10 — 11 | மூலதனச் சந்தை |
| 11 — 12 | மூலதனச் சந்தை |

குறிப்பு:
மேலே குறிப்பிட்ட பகுதிகள் அனைத்துக்கும் ஒரே கட்டணமே அறவிடப்படும்.

ஆரம்பம்: 05 05-1992
செவ்வாய் 8-00 a.m.
[சி-2248]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

ஜேர்மனியில் வேலை செய்யும் 32 வயது, செவ்வாய் குற்றமில்லை. அனுசம் முதலாம் பாதம். பெற்றோர் மணமகளை தேடுகிறார்கள். சகோதரர்கள், இனத்தவர்கள் ஜேர்மனியில் இருப்பின் விரும்பத்தக்கது. S. றாஜம் வாசிகசாலை அருகாமை, திருநெல்வேலிச் சந்தி. [20794]

### திருமண சேவை

வளன்புரம், கொழும்புத்துறையில் நடத்தப்பட்டுவரும் திருமண சேவை 6-5-92 முதல் 361, பருத்தித்துறை வீதி, நல்லூருக்கு இடமாற்றப்படுவதை அறியத் தருகிறேன். செவ்வாய்க்கிழமை தவிர்ந்த நாட்களில் 9-00 மணி முதல் 4-00 மணி வரை சந்திக்கலாம். கு. திருவிஎங்கம்.

[20826]

### வகுப்புகள்

கேக் ஐசிங் வகுப்புகள், குறைந்த செலவில் மிகக் குறுகிய காலத்தில் திறமை மிக்க ஆசிரியையால் கற்பிக்கப்படும். ஆரம்பம்: 09-05-1992 சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணி. S. சிவலிங்கம், ஜனனோதயம், தலங்காவற் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி [20830]

### விற்பனையாகின்றன

சகல விதமான அப்பியாசக் கொப்பிகள், C.R கொப்பிகள் இன்னும் பலவிதமான பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் விற்பனையாகின்றன. 'சோபிதா' 363, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [20819]

### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். ''சக்தி சரவணா'' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக) தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை.

[4813]

### தவறி விட்டது

20-04-1992 இல் ஊரியானுக்கு போகும் வழியில் [பளையில்] ரா. ராஜனேஸ் என்பவரது பிறப்பு அத்தாட்சிப் பத்திரமும், பாடசாலை விலகல் சான்றிதழும், வேறு முக்கிய சான்றிதழ்களும் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் ரா. ஜெகதீசன் அதிசயம் வீடு. ஸ்ரீ முத்துமாரி அம்மன் வீதி, அளவெட்டி தெற்கு. அளவெட்டி எனும் முகவரியில் தயவு செய்து ஒப்படைக்கவும்.

[4824]

---

# பாரதிதாசன்

## கல்வி நிறுவனம் (BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

**B. A. 1992 டிசம்பர்**

★ பொருளியல் ★
**S. வரதராஜன்**
B. A. (Hons)

★ ஏனைய பாடங்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றன.

**ஆரம்பம்: 09 - 05 - 1992**
சனி 3-00 p. m.

[சி-2255]

---

# நொதேண் கல்வி நிலையம்

சுண்டிக்குளி.

## A/L 93, 94

கிறிஸ்தவம்: போதகர் திரு. S. S. P. அமல்

Sat.: 3-00 p. m. Sun.: 2-00 p. m.

குறிப்பு : A/L - 92 வினா - விடை வகுப்புகள்

Tue.: 5-30 p. m. Thu.: 5-30 p. m.

[20832]

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

## A/L கலை, வர்த்தகம்

## 92 வினா-விடை வகுப்புக்கள்
DAY CLASSES

**ஆரம்பம்: 07 - 05 - 1992**

பொருளியல் — திரு. கலாசரன் [8-00 — 9-30]
வர்த்தகம் — திரு. இரத்தினம் [9-30 — 11-00]
கணக்கியல் — திரு. S. K. பிரபாகரன் [11-00 — 12-30]
அளவையியல் — திரு. A. பிரபாகரன் [12-30 — 2-00]

★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

**கணக்கியல் S. K. பிரபாகரன்**
SAT., SUN.

92 வினா-விடை வகுப்புக்கள் [1-30 p. m. — 3-00 p. m.]
93 புதிய பிரிவுகள் [3-00 p. m. — 4-00 p. m.]
94 புதிய பிரிவுகள் [4-00 p. m. — 5-00 p. m.]
ஆரம்பமாகிவிட்டன.

[சி-2262]

---

# டிப்ளோமா
# மனைப்பொருளியலும், கைத்திறனும்

KALALAYAAH கலாலயா

★ கேக் ஐசிங்
★ சமையற் கலை
★ கூந்தல் அலங்காரம்
★ பூ வேலை
★ தையற் கலை
★ கைப்பணி
★ சித்திரக் கலை
★ வர்ணந் தீட்டுதல்

**பயிற்சிக் காலம்: 6 மாதம்**

- பயிற்சி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட Diploma in Home Economics & Craft தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
- கிழமை நாள் பயிற்சிகள் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை நடைபெறும்.
- தொழில் புரிவோர், பாடசாலை மாணவியர், இல்லத்தரசிகள் நலன் கருதி சனி, ஞாயிறு வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.

**கிழமை நாள் பிரிவுகள் ஆரம்பம்: 11-05-1992**
**சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 16-05-1992**

மேலும் விவரங்களுக்கு:

# கலாலயா

விக்டோரியா வீதி,
[ஆஸ்பத்திரியின் பின்புறம்]
யாழ்நகர்.

[சி-1971]

---

விண்ணகப் பிரவேச

# 1 ஆம் வருட ஞாபக தினம்

உதயம்: 21 — 11 — 1920



அஸ்தமனம்: 05 — 05 — 1991

திருமதி
## மரியமுத்து மார்சலீன்பிள்ளை

''உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்''

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலயத்தில் 05-05 1992 செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியில் பங்கு கொண்டு பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி.

இவரின் பேரிழப்பால் துயருறும்:
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரிகள்,
உறவினர்கள்.

நெடியகாடு,
வல்வெட்டித்துறை

(20793)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org